030

Sample

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 06

**LLU6716- வர்த்தகச் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 2023/2024

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 06.11.2024 நேரம்: பி.ப.01.30 - பி.ப.02.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02)
ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1) "பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தம்" என்ற சொற்றொடருக்கு இல.11, 1896ம் ஆண்டு பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம், பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் விற்பனை ஒப்பந்தத்தை ஒத்த ஏனைய உடன்படிக்கைகள் என்பவற்றுக்கிடையிலான எல்லையை வரையறை செய்கிறது.

   பொருத்தமான தீர்ப்புச்சட்டத்துடன் மேலே தரப்பட்ட கூற்றினைப் பகுப்பாய்வு செய்க.
   (20 புள்ளிகள்)

2) "ஜுசி டிலைட்ஸ்" என்பது கொழும்பில் அமைந்துள்ள ஒரு பழச்சாறு விநியோக விற்பனை நிலையம் ஆகும். இவ்விற்பனை நிலையத்திற்கு முன்பாக, "சுத்தமான கனிம சேர்மான பழச்சாறு விற்பனைக்கு" என்ற விளம்பரம் இருந்தது. சில்வா ஜுசி டிலைட்ஸ் நிலையத்திற்கு சென்றதுடன் இரண்டு லீட்டர் பழச்சாறைக் கேட்டார். அப்போது அவர் விற்பனை கடையில் உள்ள ஊழியர்களிடம் தனது 5 வயது மகன் பசியின்மையை எதிர்கொள்வதுடன் பழச்சாற்றை விரும்பி அருந்துகிறான் எனக் குறிப்பிட்டார். பழச்சாற்றை அருந்திய பின்பு, சில்வாவின் மகன் கடுமையாக சுகவீனமுற்றான். அதனையடுத்து வெளியான தொழில்நுட்ப அறிக்கைகள் சில்வாவினால் கொள்வனவு செய்யப்பட்ட பழச்சாறு, பாதிப்பற்ற பதனப் பொருட்களை கொண்டிருந்தது எனவும், பழச்சாறு 35% பழங்களை உள்ளடக்கியதுடன் பாதிப்பான சேர்ப்பனவுகளையும் கொண்டுள்ளது என வெளிப்படுத்தியது.

   சில்வா ஜுசி டிலைட்ஸிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கிறார்.

   i. பொருட்கள் விற்பனை கட்டளைச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுறுத்துக்களின் பின்னணியில் சில்வாவிற்கு ஆலோசனை வழங்குக. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.
   (15 புள்ளிகள்)

   ii. ஜுசி டிலைட்ஸ் விற்பனை நிலையம் தமது பொருட்கள் தொடர்பில் எவ்வித பொறுப்புக்களையும் ஏற்காது என கடையில் ஒரு அறிவித்தலை இட்டிருந்தால் உமது விடை வேறுபாடு?
   (05 புள்ளிகள்)
   (15+5 =20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -